පාර්ලිමේන්තු ප්‍රකාශන මාලා අංක - 164
ඖෂධ නිෂ්පාදනය, සැපයීම් හා නියාමන රාජ්‍ය අමාත්‍යාංශය


පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද
වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග 119(4) යටතේ ගරු අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ
හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම

பாராளுமன்ற வெளியீட்டு தொடர் இல - 164
ஒளடத உற்பத்திகள்,வழங்கல்கள் மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சு

பாராளுமன்ற அரச கணக்குகள் குழுவினால் முன் வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியல் கட்டளை இலக்கம் 119(4)இன் கீழ் கௌரவ அமைச்சரின் அவதானிப்புக்களும் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்

Parliamentary Series Number – 164
State Ministry of Production, Supply and Regulation of Pharmaceuticals

Submission of observations of Hon. Minister and steps taken with regard to the reports tabled by the Committee on Public Accounts in terms of Standing Order No. 119(4)



	குழுவினால் கண்டறியப்பட்ட குறைபாடுகள்/ குழுவினால் வழங்கப்பட்ட பணிப்புரைகள்	குறைபாடுகளை சரி செய்வதற்கு /பரிந்துரைகளை செயற்படுத்துவதற்கு/ தற்போதைய சூழ்நிலையை சரி செய்வதற்கு குழுவினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள
01	• மருந்துகளின் கொள்வனவுக்கான செயல் திட்டத்தை பின்பற்றியிருக்காமை அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட செயல் திட்டத்தின்படி மருந்து விபரக்கொத்து மீளாய்வுக் குழு ஆண்டுக்கு ஒருமுறை கூடி, கொள்வனவு செய்யப்பட வேண்டிய மருந்து வகைகள், கொள்வனவு செய்யவேண்டிய அளவு, பயன்பாட்டிலிருந்து நீக்கப்படும் மருந்து வகைகள், மருந்து விபரக் குறிப்புகள் தொடர்பான சிக்கல்கள் போன்ற விடயங்களை மீளாய்வு செய்தல் வேண்டும். ஆனாலும், 2011 ஆம் ஆண்டுக்கு பின்னர் அந்த குழு கூடாததால், அந்த குழுவின் பரிந்துரைகள் இன்றி 2011 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை 10,193 மில்லியன் பெறுமதியான 4619 மருத்துவ பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. மருந்து விபரக்கொத்து மீளாய்வுக் குழுக் கூட்டம் நடத்துவது குறித்து அமைச்சரவைக்கு சமர்ப்பித்து அனுமதி பெறுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு குழுவினால் பணிப்புரை செய்துள்ளது.	மருந்து விபரக்கொத்து மீளாய்வுக் குழுக் கூட்டத்தை வருடாந்தம் நடாத்துதல் நடைமுறைச் சாத்தியமற்றதாக இருப்பதனால் கணக்குகள் குழுவின் பணிப்புரைகளின்படி, • இரண்டு (02) ஆண்டுகளிற்கு ஒரு முறை மருந்து விபரங்கள் மீளாய்வுக் குழுக் கூட்டத்தை நடாத்துதல் • சத்திரசிகிச்சை அறைகள் மற்றும் ஆய்வுகூடங்கள் தொடர்பிலான மருந்து விபரங்கள் மீளாய்வுக் குழுக் கூட்டத்தை மூன்று (03) ஆண்டுகளிற்கு ஒரு முறை நடாத்துதல் ஆகியவற்றுக்கு 2022.02.01 ஆந் திகதி அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டது. (பின்னிணைப்பு 01)
02	• மருத்துவப் பொருட்களை மதிப்பிடும் செயற்பாட்டில் உள்ள குறைபாடுகள் 2017 ஆம் ஆண்டிற்குள் 19,844 மருத்துவப் பொருட்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதாக மருத்துவ விநியோக முகாமைத்துவ தகவல் அமைப்பு (MSMIS) வெளிப்படுத்தியுள்ளது. பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்ட மருந்துகளை மருத்துவ வழங்கல் முகாமைத்துவ தகவல் முறைமையிலிருந்து அகற்றப்படவில்லை என்பதை அவதானித்த குழு, பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்ட மருந்துகளை மருத்துவ வழங்கல் முகாமைத்துவ தகவல் முறைமையிலிருந்து நீக்குவதற்கும் மற்றும் புதிய மருந்துகளை அந்த	பின் தொடர்வதற்காக தேவைப்படுவதால், பாவணையில் இருந்து அகற்றப்பட்ட மருந்துகளை மருத்துவ விநியோக அமைப்பில் இருந்து முழுமையாக அகற்ற முடியாது. ஆனாலும், அந்தப் பொருட்களுக்கான மதிப்பீடுகளைப் பெறுதல் மற்றும் கட்டளையிடல் அமைப்பினூடாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. 2022.10.19 ஆம் திகதிக்கு அமைப்பில் காணப்படும் செயலில் உள்ள பொருட்களின் எண்ணிக்கை 12,754 என்பதுடன் அவை பின்வருமாறு, மருந்து - 1,151 சத்திர சிகிச்சைப் பொருட்கள் - 8,134 ஆய்வுகூடப் பொருட்கள் - 3,469 **மொத்தம் - 12,754**

	முறைமையில் சேர்த்து, மருத்துவ வழங்கல் முகாமைத்துவ தகவல் முறைமையை புதுப்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு பணிப்புரை செய்துள்ளது.	
03	மருந்துகளை வியாபாரப் பெயரில் கொள்வனவு செய்தல் மதிப்பீடு செய்யாத 10 பொருட்களின் மாதிரியை ஆய்வு செய்ததில், 7 பொருட்களுக்கு 2014 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு ஜூன் வரை 243 சந்தர்ப்பங்களில் 168 மில்லியன் ரூபா செலவிடப்பட்டு நோயாளியின் பெயருக்கு (Name Patient) வழங்கப்படும் மருந்து கொள்வனவு செய்யப்பட்டமை அவதானிக்கப்பட்டது. மேலும், Herception என்ற அசல் மருந்தை அகற்றி அதன் கீழுள்ள அதிக விலை கொண்ட நோயாளியின் பெயருக்கு பெற்றுக்கொள்ளப்படும் Trastuzumab எனும் புற்று நோய் மருந்து Herticad எனும் வர்த்தகப் பெயரில் 2018 மற்றும் 2019 ஆண்டுகளில் 14 சந்தர்ப்பங்களில் 891 மில்லியன் ரூபா செலவிடப்பட்டு உள்நாட்டு விநியோகத்தர் ஒருவரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டமையும் அவதானிக்கப்பட்டது. இதன்போது, குறைந்த விலையை நிராகரித்து இந்த மருந்தை வாங்கியதால் 230.9 மில்லியன் ரூபா மேலதிகமாக செலவிடுவதற்கு நேர்ந்துள்ளது. நோயாளியின் பெயரில் வழங்கப்படுகின்ற மருந்துகள் அத்தியாவசிய சந்தர்ப்பங்களில் மாத்திரம் கொள்வனவு செய்யுமாறு குழுவினால் பணிப்புரை செய்துள்ளது.	மருந்தின் பெயரில் மட்டுமே அரசாங்க மருந்தாக்கக் கூட்டுத்தாபனத்திற்கு மருந்துகள் கட்டளை செய்யப் படுகின்றன. இருப்பினும், நோயாளிகளின் பெயருக்கு பெற்றுக் கொள்ளப்படுகின்ற புற்றுநோய் மருந்துகளான (உதா: Trastuzumab) உயிரியல் மருந்துகளின் தரத்தை அளவிடுவது கடினம் என்பதால், இரண்டாவது கட்டத்தை எட்டிய புற்றுநோயாளிகளுக்கு அந்த அசல் தயாரிப்பை (Original Product) மருத்துவர்கள் பரிந்துரைக்கின்றனர். அதன்படி, நோயாளியின் பெயரில் வழங்கப்படுகின்ற மருந்துகள் அத்தியாவசிய சந்தர்ப்பங்களில் மாத்திரம் குறித்த வியாபாரப் பெயரில் கொள்வனவு செய்யப்படுகின்றன. எவ்வாறாயினும், மருத்துவ நிபுணர்களின் சிபாரிசுக்கு மேலதிகமாக இந்த இராஜாங்க அமைச்சு, இலங்கை அரசாங்க மருந்தாக்கக் கூட்டுத்தாபனம் (SPC) மற்றும் தேசிய மருந்து ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை (NMRA) ஆகியவற்றிடமிருந்து இதற்காக அனுமதி பெறப்பட வேண்டும்.
04	மருந்து விபரக்கொத்து மீளாய்வுக் குழுவின் பரிந்துரையின்றி வைத்தியசாலைகள் ஊடாக உள்நாட்டு சந்தையில் மருந்துகள் கொள்வனவு செய்தல். 2020 ஆம் ஆண்டில் சீமாட்டி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலை ஊடாக 9 மில்லியன் ரூபா மருந்துகள் இவ்வாறு மருந்து விபரக்கொத்து மீளாய்வுக் குழுவின் பரிந்துரையின்றி கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.	விஷேட மருத்துவ நிபுணர்களால் பரிந்துரைக்கப்பட்டால் மட்டுமே சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் பரிந்துரை மற்றும் சுகாதார செயலாளரின் அனுமதியுடன் விபரக் கொத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மருந்துகள் கொள்வனவு செய்யப்படுகிறது. ஆனால் இந்த முறையில் மருந்துகள் கொள்வனவு செய்வது குறைந்த அளவு மட்டத்தில் உள்ளது என்பதுடன், அடிக்கடி கொள்வனவு செய்யப்படும் மருந்துகள் பெரும்பாலானவை விபரக் கொத்தில் பதியப்பட்டு அரச மருந்தக கூட்டுத்தாபனத்தின் ஊடாக பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

05	மருத்துவ விநியோக களஞ்சியம் பொருத்தமான தரத்தில் பராமரிக்கப்படாமை மருத்துவ விநியோகப் பிரிவிற்கு சொந்தமான களஞ்சியசாலைகளின் வெப்பநிலை சரியாக பராமரிக்கப்படாமல் இருப்பதும், மத்திய ஔடத களஞ்சியங்களிலும் மற்றும் வைத்தியசாலைகளிலும் வழித்தடங்களில் மருத்துவப் பொருட்கள் களஞ்சியப் படுத்தப்பட்டுள்ளமையும் அவதானிக்கப்பட்டது. இவ்வாறு உரிய முறையில் மருந்துகள் களஞ்சியப்படுத்தப்படாத காரணத்தால் 2011 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை 6259 மில்லியன் ரூபா பெறுமதியான மருந்துகள் தரமற்ற நிலையில் காணப்பட்டதுடன் அவற்றில் 99 வீதமானவை நோயாளிகளுக்கு வழங்கப்பட்டமையும் அவதானிக்கப்பட்டது.இந்நிலையில் தரத்தில் தோல்வியுற்ற மருந்து செலவுகளை விநியோகத்தர்களிடமிருந்து அறவிட முடியாத நிலை உள்ளது. மருந்துகளின் பாதுகாப்பை பாதுகாக்கும் வகையில் மருந்துகளை களஞ்சியப்படுத்துவதற்கான பணியை நிறைவு செய்யுமாறு குழு பணிப்புரை செய்துள்ளது.	தற்போது வெப்பநிலையைக் கட்டுப்படுத்தக்கூடிய 28,000 சதுர அடி கொண்ட ஒரு களஞ்சியம் வெயங்கொட பிரதேசத்திலும், 49,000 சதுர அடி கொண்ட ஒரு களஞ்சியம் சாவஸ்திபுர பிரதேசத்திலும் பெற்றுக்கொண்டுள்ளது. இதைத்தவிர, மருத்துவ களஞ்சிய வசதிகளை மேம்படுத்தும் திட்டத்தின் ஊடாக 2020 ஆம் ஆண்டில் 65.37 மில்லியனும் மற்றும் 2021 ஆம் ஆண்டில் 233.37 மில்லியனும் செலவிடப்பட்டு 81 நிறுவனங்களில் பிராந்திய களஞ்சிய வசதிகள் மேம்படுத்தப்பட்டது.
06	• மதிப்பீடு செய்யப்படாத பொருட்களில் மதிப்பீடு செய்ய வேண்டிய விலையுயர்ந்த பொருட்களும் காணப்பட்ட போதிலும், அதைப் பொருட்படுத்தாமல் அந்தப் பொருட்களை மதிப்பீடு செய்யாது போட்டித்தன்மையில் இருந்து வெளியேறி அதிக விலைக்கு உள்நாட்டில் கொள்வனவு செய்யப்பட்டமை ஒரு மருந்தை மதிப்பீடு செய்யும் போது, உலகளாவிய ரீதியில் விலைமனுக் கோரலின் ஊடாக அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தினால் கொள்வனவு செய்யப்படுவதையும், நோயாளியின் பெயருக்கு வழங்கப்படும் மருந்து மதிப்பீடு செய்யாது உள்நாட்டு சந்தையில் கொள்வனவு செய்யப்படுவதையும் அவதானிக்கப்பட்டது. ஆனால் Trastuzumab எனும் மருந்து நோயாளியின் பெயருக்கு வழங்கப்படும் மருந்து என்றபோதிலும் அது மதிப்பீடு செய்யப்பட்டு பெரும் நட்டத்துடன் இறக்குமதி செய்தல் மற்றும் சில மருந்துகள் மதிப்பீடு செய்யப்படாமல்	விஷேட மருத்துவ நிபணர்களின் பரிந்துரையின் கீழ் அமைச்சு செயலாளரின் பரிந்துரையுடன் மதிப்பீடு செய்யாது உள்நாட்டு ரீதியில் இம்மருந்து கொள்வனவு செய்யப்பட்ட போதிலும், அது தொடர்பாக பரிந்துரைகள் வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட குழுவினால் அந்த கோரிக்கைகள் பகுப்பாய்வு செய்யப்பட்டதுடன் பாரியளவில் மதிப்பீடு செய்யாது கொள்வனவு செய்யப்படும் மருந்துகளை அடையாளம் கண்டு (இணைப்பு 02) அந்த மருந்துகள் உலகளாவிய ரீதியிலான டெண்டர்கள் மூலம் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதைத்தவிர, தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை ஊடாகவும் இந்த மருந்து இந்த நாட்டில் பயன்படுத்துவதற்கு ஏற்றதா, அவசியமா என்பதை ஆராய்ந்த பிறகு அதற்கான அனுமதி வழங்கப்படுகிறது.

	உள்நாட்டு சந்தையில் கொள்வனவு செய்யப்பட்டமை அவதானிக்கப்பட்டது. Trastuzumab மருந்தை உள்நாட்டில் கொள்வனவு செய்வதற்கு அதிக பணம் செலவாகும் என்பதால், தேவையான சந்தர்ப்பங்களில் மாத்திரம் அந்த மருந்தை கொள்வனவு செய்வதற்கு ஏற்பாடு செய்வதன் மூலம் உள்நாட்டு கொள்வனவை குறைக்குமாறு பணிப்புரை செய்துள்ளது. மேலும், வைத்தியசாலைகளினால் உள்நாட்டில் கொள்வனவு செய்யப்படும் மருந்துகள் தொடர்பாக ஒரு பதிவேடு தயாரித்து அதனை கணக்காய்வாளர் நாயகத்திற்கு வழங்குமாறு குழு பணிப்புரை செய்துள்ளது.	
07	• கொள்வனவு கால அட்டவணைக்கு அமைய செயற்பட்டிருக்காமை அமைச்சின் கொள்ளல் குழு மட்டத்தில் உத்தரவுகளுக்கு 11- 12 மாதங்கள் ஆகலாம் என்றபோதிலும், 2020 ஆம் ஆண்டில் சில மருந்துகள் கொள்வனவு செய்வதற்காக 14 மாதங்கள் முதல் 48 மாதங்கள் வரையான காலம் எடுத்தல், கொள்ளல் கோவைகளுக்கான தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் மற்றும் கொள்ளல் குழுவின் அனுமதி பெற 7 மாதங்கள் தொடக்கம் 24 மாதங்கள் வரையான காலம் எடுத்தல் மற்றும் இந்த தாமதம் காரணமாக கொள்முதல் காலத்திற்குப் பிறகு அந்த மருந்து அதிக விலைக்கு உள்நாட்டு சந்தையில் கொள்வனவு செய்ய நேரிட்டமை. முறையான கொள்வனவுத் திட்டமிடல் மற்றும் கொள்வனவு கால அட்டவணைக்கு அமைய செயற்படக்கூடிய ஒரு புதிய இலத்தினியல் முறைமையை (ERP) உருவாக்குவதற்கு அல்லது ஏற்கனவே காணப்படுகின்ற முறைமையை மேம்படுத்தி பயன்படுத்துவதன் மூலம் தாமதங்களைக் குறைப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டு அது தொடர்பான அறிக்கையை குழுவிற்கு சமர்ப்பித்தல்.	நோயாளிகளின் மருந்து நுகர்வு முறையினை (Consumption Base) அடிப்படையாகக் கொண்டு மருந்து மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்கும், அந்தத் தகவல்களின் அடிப்படையில் முறையான கொள்வனவுத் திட்டம் மற்றும் கொள்வனவு கால அட்டவணையின் படி செயல்படுவதற்கும் "ஸ்வஸ்த" என்ற பெயரில் புதிய கணினி முறைமையை அறிமுகப்படுத்துவதற்காக 2022.01.19 ஆந் திகதி அமைச்சரவை ஒப்புதல் பெறப்பட்டது (பின்னிணைப்பு 03). இதற்கமைய, தொடர்புடைய முறைமையின் அபிவிருத்திக்கான கொள்வனவு நடவடிக்கைகள் நிறைவடைந்து வழங்குனர் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் ஸ்ரீ லங்கா ரெலிகொம் நிறுவனத்துடன் இணைந்து தரவுகளை களஞ்சியப்படுத்தல் மற்றும் வலையமைப்பு நடவடிக்கைகளை செயற்படுத்துதல் என்பன ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த முறைமை செயல்படத் தொடங்கியவுடன், தாமதங்களைக் குறைத்து, கொள்வனவு நடவடிக்கைகளை பூரணப்படுத்த முடியும். அரசாங்க கணக்குகள் குழுவின் பணிப்புரையின் படி முறையான திட்டமிடல் மற்றும் கொள்வனவு கால அட்டவணைக்கு அமைய செயற்படக்கூடிய ஒரு புதிய இலத்தினியல் முறைமையை (ERP) உருவாக்குவதற்கு அல்லது ஏற்கனவே காணப்படுகின்ற முறைமையை மேம்படுத்தி பயன்படுத்துவதன் மூலம் தாமதங்களைக் குறைப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டு அது தொடர்பான அறிக்கையை குழுவிற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுத்தல்.
08	• விநியோகத்தர்களினால் ஏற்படும் தாமதத்தின் காரணமாக தேவையான மருத்துவ விநியோகங்கள், மருத்துவ விநியோகப் பிரிவின்	கடன் கடிதங்களுக்கான கோரிக்கையின் போது குழு ஒன்றின் ஊடாக அதனை மேற்கொண்டு தாமதத்திற்கான

	ஊடாக உள்நாட்டு சந்தையில் கொள்வனவு செய்யப்படுவதால் ஏற்படும் கூடுதல் செலவுகள் • விநியோகத்தர்களினால் ஏற்படும் தாமதத்தின் காரணமாக உள்நாட்டு சந்தையில் கொள்வனவு செய்ய நேரிட்டால் விநியோகத்தரிடமிருந்து நட்டத்தை அறவிட வேண்டும் என்றபோதிலும், உண்மையில் தாமதத்திற்கு எந்த தரப்பு பொறுப்பு என்பது பற்றி கண்டறிய எந்த வழிமுறையும் காணப்படாமை. விநியோகத்தர்களின் தாமதத்தின் காரணமாக உள்நாட்டு சந்தையில் இருந்து மருந்துகள் கொள்வனவு செய்வதை தடுப்பதற்கு சுகாதார அமைச்சின் ஊடாக ஒரு பொருத்தமான அமைப்பை தயாரிக்குமாறு பணிப்புரை செய்துள்ளது. விநியோகம் தாமதமாகும் மருந்துகள் தொடர்பாக ஒரு பகுப்பாய்வை சுகாதார அமைச்சின் உள்ளக கணக்காய்வுக் குழுவின் ஊடாக மேற்கொண்டு ஒரு விரிவான அறிக்கையை குழுவிற்கு சமர்ப்பிக்குமாறு பணிப்புரை செய்துள்ளது. • வைத்தியசாலைகளினூடாக உள்நாட்டு சந்தையில் இருந்து மருந்துகள் கொள்வனவு செய்யும் போது செலவாகும் மேலதிக செலவுகளை அறவிடுவதற்கான முறைமை.	ஒரு கட்டணம் அறவிடப்படுவதுடன், கடந்த 05 மாதங்களில் 70 மில்லியன் தாமதக் கட்டணமாக அறவிடப்பட்டுள்ளது. மருத்துவ விநியோகப் பிரிவிற்கு மருத்துவப் பொருட்களைப் பெற்ற பிறகு, இருப்பு கிடைத்தல் பதிவேட்டில் உள்வாங்கப் படுவதுடன் அதன் மூலம் தாமதத்தை அடையாளம் காணலாம். ஊழியர்களினால் தாமதம் ஏற்பட்டால் இந்த அமைப்பின் மூலம் கண்டறிய வாய்ப்பு உள்ளது. உரிய அறிக்கை அரசாங்க கணக்குகள் குழுவிற்கு CA/AQ/FCC/02/COPA/2019(iii) எனும் இலக்கம் கொண்ட 2022.06.22 ஆம் திகதிய கடிதம் மூலம் அனுப்பப்பட்டுள்ளது.
09	• அமைச்சின் ஊடாக சுற்றறிக்கை வெளியிட தாமதம் ஏற்பட்டதால், நோயாளிகளுக்கு தரமற்ற மருத்துவப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளமை.	அறிமுகப்படுத்துவதற்கு உத்தேசித்துள்ள புதிய சுவஸ்தா கணினி அமைப்பு, பிரதேச வைத்தியசாலைகள் வரை விரிபடுத்துவதன் மூலம் இந்த குறைபாட்டை நிவர்த்தி செய்யக்கூடிய சாத்தியம் உள்ளது.
10	• தரத்தில் தோல்வியுற்ற மருந்துகளுக்கான இழப்பை விநியோகத்தர்களிடமிருந்து அறவிடுவதில் காணப்படும் முன்னேற்றம் தரத்தில் தோல்வியுற்ற மருந்துகளுக்கான இழப்பை விநியோகத்தர்களிடமிருந்து அறவிடுவதில் காணப்படும் முன்னேற்றம் குறித்த அறிக்கையை ஒரு மாதத்திற்குள் குழுவிடம் சமர்ப்பிக்குமாறு பணிப்புரை செய்துள்ளது. மருத்துவ விநியோகப் பிரிவினால் தர தோல்வியுற்ற மருந்துகள் மற்றும் மருத்துவ விநியோகங்களுக்கான செலவுகளை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திடம் இருந்து அறவிடுவதற்கு பதிலாக உரிய	உரிய அறிக்கை அரசாங்க கணக்குகள் குழுவிற்கு SM/PSRP/07/COPA/20(1) எனும் இலக்கம் கொண்ட 2022.03.28 ஆம் திகதிய கடிதம் மூலம் அனுப்பப்பட்டுள்ளது. (இணைப்பு 04) உரிய தொகையை செலுத்தாத விநியோகத்தர்கள் திருப்தியின்மை பட்டியலில் சேர்க்கப்பட்டு உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

	விநியோகத்தர்களிடம் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் என குழு பணிப்புரை செய்துள்ளது.	
11	• மருத்துவ வழங்கல் கொள்கலன்களில் அரசாங்க இலட்சினை அச்சிடப்பட்டிருக்காமை அரசாங்க இலட்சினை அச்சிடப்பட்டிருக்காத மருந்துவ வழங்கல்கள் தொடர்பான ஒரு அறிக்கையை ஒரு மாதத்திற்குள் கணக்குகள் குழுவிற்குச் சமர்ப்பிக்கும் படி குழு பணிப்புரை செய்துள்ளது.	அத்தியவசிய தேவை ஏற்படும் சந்தர்ப்பங்களில் மிகக் குறைந்த அளவில் கொள்வனவு செய்தல், நன்கொடையாக கிடைக்கப் பெறும் மருந்துகளை கட்டுப்படுத்தப்பட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு பெறல், சில சந்தர்ப்பங்களில் அத்தியவசிய மருந்துகள் ஒசுசல ஊடாக சிறிய அளவில் பெறல், நிலையக (branded) அடையாளமிடப்பட்ட மருந்துகளை கொள்வனவு செய்தல், Covid சூழ்நிலையில் அத்தியவசியத்தின் அடிப்படையில் மருந்துகள் கொள்வனவு செய்தல் போன்ற சந்தர்ப்பங்களில் அரசாங்க இலட்சினை இல்லாமல் மருந்துகளை பெற நேரிட்டது. மற்ற எல்லா சந்தர்ப்பங்களிலும் அரசாங்க இலட்சினையுடன் கொள்வனவுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அரசாங்க இலட்சனை பொறிக்கப்படாத மருந்துகள் விநியோகம் தொடர்பான அறிக்கை அரசாங்க கணக்குகள் குழுவிற்கு SM/PSRP/07/COPA/20(1) எனும் இலக்கம் கொண்ட 2022.03.28 ஆம் திகதிய கடிதம் மூலம் அனுப்பப்பட்டுள்ளது.
12	• மருத்துவ வழங்கல்கள் கிடைக்கப் பெற்றவுடன் பொருள் பெறுவனவு பத்திரங்கள் (GRN) வழங்கப்படாமை அரசாங்க மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திடமிருந்து கொள்வனவு செய்யப்படும் மருந்து போக்குவரத்து சேவை வழங்குநர்கள் ஊடாக மருத்துவ விநியோகப் பிரிவிற்கு கொண்டு செல்லப்படுவதாக கண்டறியப் பட்டுள்ளதாகவும், அக்களஞ்சியங்களில் போதியளவு இடவசதி காணப்படாத காரணத்தால் அதிக பெறுமதியான மருத்துவப் பொருட்கள் போக்குவரத்து சேவை வழங்குநர்களிடம் இருந்து பெறப்படாமல் களஞ்சியங்களின் முன்புறம் உள்ள நடைபாதைகளில் வைத்து பின்னர் களஞ்சியங்களில் இடவசதி கிடைத்தவுடன் அவற்றை களஞ்சியங்களுக்கு பொறுப்பேற்று பொருள் பெறுவனவு பத்திரங்கள் வழங்குதல். அரசாங்க மருந்தாக்கக் கூட்டுத்தாபனத்திடமிருந்து களஞ்சியங்களிற்கு மருந்துகள் கிடைத்தவுடன் பொருள் பெறுவனவு பத்திரங்கள் வழங்கப்படுவதற்கு மேற் கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பில் அறிக்கையொன்றை	உரிய அறிக்கை அரசாங்க கணக்குகள் குழுவிற்கு SM/PSRP/07/COPA/20(1) எனும் இலக்கம் கொண்ட 2022.03.28 ஆம் திகதிய கடிதம் மூலம் அனுப்பப்பட்டுள்ளது. இந்நிலையை தவிர்க்கும் வகையில; Pricing and Checking Unit என்ற புதிய பிரிவு 2021/11/25 ஆம் திகதியன்று மருத்துவ விநியோகப் பிரிவின் நுழைவாயிலுக்கு முன் பகுதியில் நிறுவப்பட்டுள்ளது. மேலும், தற்போது அதில் பணியாற்றும் பொருட்டு 04 உத்தியோகத்தர்கள் சேவை சுழற்சி முறையின் கீழ் காலை 8.00 மணி தொடக்கம் இரவு 8.00 மணிவரை பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இது அனைத்து அரச வேலை நாட்களிலும் செயற்படுகின்றது. மருத்துவ விநியோகப் பிரிவிற்கு கையிருப்பு கிடைத்ததும் தேவையான பணிகளை பூர்த்தி செய்து கொள்ளும் முகமாக விநியோகத்தர்கள் சம்பந்தப்பட்ட ஒவ்வொரு பிரிவுகளுக்கும் செல்வதற்கு நேரிடுவதுடன், இந்த புதிய பிரிவு நிறுவப்பட்டதன் மூலம் அந்த அனைத்து செயற்பாடுகளையும் அந்தப் பிரிவின் ஊடாக மேற்கொள்ள முடியும். இதன்மூலம் முன்பு காணப்பட்ட சிக்கல் நிலைகள் நீங்கி மிகவும் வினைத்திறனாக செயற்படுத்தப்படுகின்றது. தற்போது மருத்துவ விநியோகப் பிரிவிற்கு கிடைக்கப்பெறும் அனைத்து இருப்புகளும் பெறப்பட்டு, ஒரே நாளில் பெறுகை பத்திரம் (GRN) வழங்கப்படும். தற்போது வெயங்கொடை, சாவஸ்திபுர, வெள்ளவத்தை, அங்கொடை மற்றும் திகன

	ஒரு மாதத்திற்குள் கணக்குகள் குழுவிற்குச் சமர்ப்பிக்குமாறு பணிப்புரை செய்தல்.	ஆகிய பிரதேசங்களும் களஞ்சியத்திற்காகவும் பெறுகைப் பத்திரம் (GRN) வழங்குவதற்கான வசதிகள் வழங்கப்பட்டுள்ளது.
13	• இருப்பு பற்றாக்குறை தொடர்பாக நிதி ஒழுங்கு விதிகளுக்கு அமைய செயற்படாமை. 2015 ஆம் திகதியில் மருத்துவ விநியோகப் பிரிவின் களஞ்சியங்களில் காணப்பட்ட 43 மில்லியன் ரூபா பெறுமதியான இருப்பு பற்றாக்குறை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படாமை.	11 களஞ்சிய உத்தியோகத்தர்கள் தொடர்பான காணப்படும் பற்றாக்குறை இருப்பு பெறுமதி குறைப்பு பின்வருமாறு. 2020.12.31 ஆம் திகதிக்கு அறவிடப்பட்ட பெறுமதி - ரூ 3,261,404.00 2021.01.01 ஆம் திகதி முதல் 2022.09.30 ஆம் திகதி வரை அறவிடப்பட்ட பெறுமதி - ரூ 179,970.00 2022.09.30 ஆம் திகதிக்கு அறவிடப்பட்ட பெறுமதி - ரூ 3,441,374.00
14	• மருத்துவ விநியோகங்கள் காலாவதியாகும் அளவு 2015 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை காலாவதியான மருந்துகளின் பெறுமதி 1,122 மில்லியன் ரூபா எனவும், 2018 ஆம் ஆண்டில் 16 மில்லியன் ரூபா எனவும், 2019 ஆம் ஆண்டில் 240 மில்லியன் ரூபா எனவும், 2020 ஆம் ஆண்டில் 208 மில்லியன் ரூபா எனவும் கண்டறியப்பட்டுள்ளது. 2017 – 2018 ஆண்டில் ஹோமாகம ஆதார வைத்தியசாலையில் தைரொக்சின் 50mcg வருடாந்த மதிப்பீடு 6,000,000 என தவறாக மதிப்பிடப்பட்டு, கொள்வனவு செய்யப்பட்டமையினால் அந்த மருந்துளில் அதிகளவான மருந்துகள் காலாவதியானது எனவும், அந்த மருந்தகளின் பெறுமதி 3.4 மில்லியன் ஆகும்.	அறிமுகப்படுத்துவதற்கு உத்தேசித்துள்ள புதிய கணினி அமைப்பு வைத்தியசாலை மட்டத்தில் செயற்படுத்தப்பட்ட பின்னர் மருந்துகள் நுகர்வு அமைப்பை கண்டறிய முடிந்ததுடன், அடுத்த ஆண்டு தொடக்கம் நுகர்வு அமைப்பின் அடிப்படையில் மருந்துகள் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
15	• கொள்வனவு செய்யப்படும் அனைத்து மருத்துவப் பொருட்களின் மாதிரியின் நிலையை பரிசோதிப்பதற்கு முறையொன்று அறிமுகப்படுத்தப்படாமை மற்றும் தற்போது மருந்துகளின் நிலை பரிசோதிக்கப்படும் முறை • தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் ஆய்வுகூடத்தின் மேம்பாட்டு பணிகள்.	சில மருத்துவ விநியோகப் பொருட்களின் தரத்தை ஆய்வு செய்வதற்கான வசதிகள் இந்நாட்டில் இல்லை என்பதுடன், அந்த வசதிகளை மேம்படுத்துவதற்கு அரச மருந்தாக்கல் கூட்டுத்தானத்தின் ஆய்வுகூடம் உலக சுகாதார அமைப்பின் உதவியுடன் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் ஆய்வுகூடம் மேம்படுத்தப்பட்டு வருகிறது. இப்பணிகள் 2 ஆண்டுகளில் நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையினால் அங்கீகரிக்கப்படாத எந்த மருந்துகளும் அரச மருந்தாக்கல்

	• தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் பதிவு செய்யப்படாத மருந்துகளை இறக்குமதி செய்தல். தரத்தில் தோல்வியுற்ற மருந்துகளை அடையாளம் காணும் முறைகள் தொடர்பான முன்மொழிவை அமைச்சரவை மூலம் நியமிக்கப்பட்ட குழுவின் ஊடாக தயாரித்து அதனை குழுவிடம் சமர்ப்பிக்குமாறு பணிப்புரை செய்துள்ளது. தேசிய ஒளடதங்கள் அதிகார சபையின் நாரஹேன்பிட்ட இல் உள்ள ஆய்வுகூடம் தற்போது விவசாய அமைச்சிற்கு சொந்தமான காணி என்பதால் அந்த காணியை கையகப்படுத்துவதற்கான அமைச்சரவைப் பத்திரமொன்றை அமைச்சரவைக்கு சமர்ப்பித்து அனுமதி பெறுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும், 2.5 ஏக்கர் காணியில் இந்த கட்டிடத் தொகுதி அமைப்பதற்கு உத்தேசித்துள்ளதால் தொழில்நுட்ப தேவை இல்லையெனின் சுமார் 1 ஏக்கர் பரப்பில் அதனை நிர்மாணிக்கும் வகையில் அந்த திட்டத்தை மீளாய்வு செய்வதற்கு தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு அனுப்புமாறு பணிப்புரை செய்துள்ளது.	கூட்டுத்தாபனத்தினால் இந்த நாட்டிற்கு இறக்குமதி செய்யாது. தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையிடம் கையளிக்கப்படவுள்ள உத்தேச புதிய காணி தொடர்பான பூர்வாங்க கலந்துரையாடல்களின் பிரகாரம் அதற்கான அபிவிருத்தி நடவடிக்கைகளை ஆரம்பிக்க தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை தீர்மானித்துள்ளது. அந்த அமைச்சரவைப் பத்திரம் தொடர்பாக விளக்கம் அளிப்பதற்காக, நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட்ட கடிதம் (இணைப்பு 05) இன் ஊடாக சட்டவிரோதமாக குடியிருக்கும் குடியிருப்பாளர்கள் மற்றும் உத்தியோக பூர்வ இல்லங்களில் குடியிருப்பவர்களை மீள்குடியேற்றுவதற்கும் மற்றும் அவர்களை வேறு இடங்களில் குடியமர்த்துவதற்கும் தேவைப்படும் நிர்மாணச் செலவுக்கான மதிப்பீட்டு மற்றும் சட்ட விரோத குடியிருப்பாளர்களை வெளியேற்றி உத்தேச புதிய நிலத்தை ஒளடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபைக்கு சட்டபூர்வமாக கையகப்படுத்துவதற்கு எடுக்கும் காலக்கெடு குறித்த விபரங்களை கோரியுள்ளது.

கலாநிதி தெதவிய ரம்புக்கவெல்லஇ
சுகாதார அமைச்சர்